ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 1.4 – அஞ்சிறைய

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 1.4 – அஞ்சிறைய

‡ அஞ்சிறைய மட நாராய் ! ⋆
அளியத்தாய் ! ⋆
நீயும் நின் அஞ்சிறைய சேவலும் ஆய் ⋆
ஆவா என்றெனக்கருளி ⋆
வெஞ்சிறைப் புள் உயர்த்தாற்க்கு ⋆
என் விடு தூதாய்ச் சென்றக்கால் ⋆
வன் சிறையில் அவன் வைக்கில் ⋆
வைப்புண்டால் என் செய்யுமோ ‖ **1.4.1** ‖

என் செய்ய தாமரைக் கண் ⋆
பெருமானார்க்கென் தூதாய் ⋆
என் செய்யும் உரைத்தக்கால் ⋆
இனக் குயில்காள் ! நீர் அலிரே ⋆
முன் செய்த முழு வினையால் ⋆
திருவடிக் கீழ்க் குற்றேவல் ⋆
முன் செய்ய முயலாதேன் ⋆
அகல்வதுவோ விதி இனமே ‖ **1.4.2** ‖

விதியினால் பெடை மணக்கும் ⋆
மென் நடைய அன்னங்காள் ! ⋆
மதியினால் குறள் மாணாய் ⋆
உலகிரந்த கள்வற்கு ⋆
மதியிலேன் வல் வினையே ⋆

மாளாதோ என்றொருத்தி ⋆
மதி எலாம் உள் கலங்கி ⋆
மயங்குமால் என்னீரே ॥ **1.4.3** ॥

என் நீர்மை கண்டிரங்கி ⋆
இது தகாதென்னாத ⋆
என் நீல முகில் வண்ணற்கு ⋆
என் சொல்லி யான் சொல்லுகேனோ ⋆
நன் நீர்மை இனியவர் கண் ⋆
தங்காதென்றொரு வாய்ச்சொல் ⋆
நன் நீல மகன்றில்காள் ! ⋆
நல் குதிரோ நல்கீரோ ॥ **1.4.4** ॥

நல்கித் தான் காத்தளிக்கும் ⋆
பொழில் ஏழும் வினையேற்கே ⋆
நல்கத் தான் ஆகாதோ ⋆
நாரணனைக் கண்டக்கால் ⋆
மல்கு நீர்ப் புனற்படப்பை ⋆
இரை தேர் வண் சிறு குருகே ! ⋆
மல்கு நீர்க் கண்ணேற்கு ⋆
ஓர் வாசகம் கொண்டருளாயே ॥ **1.4.5** ॥

அருளாத நீர் அருளி ⋆
அவர் ஆவி துவரா முன் ⋆
அருள் ஆழிப் புட்கடவீர் ⋆
அவர் வீதி ஒரு நாள் என்று ⋆
அருள் ஆழி அம்மானைக் ⋆
கண்டக்கால் இது சொல்லி ⋆

அருள் ஆழி வரி வண்டே ! ⋆
யாமும் என் பிழைத்தோமே ॥ **1.4.6** ॥

என் பிழை கோப்பது போலப் ⋆
பனி வாடை ஈர்கின்ற ⋆
என் பிழையே நினைந்தருளி ⋆
அருளாத திருமாலார்க்கு ⋆
என் பிழைத்தாள் திருவடியின் ⋆
தகவினுக்கென்றொரு வாய்ச்சொல் ⋆
என் பிழைக்கும் இளங்கிளியே ! ⋆
யான் வளர்த்த நீ அலையே ॥ **1.4.7** ॥

நீ அலையே சிறு பூவாய் ! ⋆
நெடுமாலார்க்கென் தூதாய் ⋆
நோய் எனது நுவல் என்ன ⋆
நுவலாதே இருந்தொழிந்தாய் ⋆
சாயலொடு மணி மாமை ⋆
தளர்ந்தேன் நான் ⋆
இனி உனது வாய் அலகில் இன் அடிசில் ⋆
வைப்பாரை நாடாயே ॥ **1.4.8** ॥

நாடாத மலர் நாடி ⋆
நாள் தோறும் நாரணன் தன் ⋆
வாடாத மலர் அடிக் கீழ் ⋆
வைக்கவே வகுக்கின்று ⋆
வீடாடி வீற்றிருத்தல் ⋆
வினை அற்றதென் செய்வதோ ⋆

ஊடாடு பனி வாடாய் ! ⋆
உரைத்தீராய் எனதுடலே ॥ **1.4.9** ॥

உடல் ஆழிப் பிறப்பு வீடு ⋆
உயிர் முதலா முற்றுமாய் ⋆
கடல் ஆழி நீர் தோற்றி ⋆
அதனுள்ளே கண் வளரும் ⋆
அடல் ஆழி அம்மானைக் ⋆
கண்டக்கால் இது சொல்லி ⋆
விடல் ஆழி மட நெஞ்சே ! ⋆
வினையோம் ஒன்றாம் அளவே ॥ **1.4.10** ॥

‡ அளவியன்ற ஏழ் உலகத்தவர் ⋆
பெருமான் கண்ணனை ⋆
வள வயல் சூழ் வண் குருகூர்ச் ⋆
சடகோபன் வாய்ந்துரைத்த ⋆
அளவியன்ற அந்தாதி ⋆
ஆயிரத்துள் இப்பத்தின் ⋆
வள உரையால் பெறலாகும் ⋆
வான் ஓங்கு பெரு வளமே ॥ **1.4.11** ॥

அடிவரவு — அஞ்சிறை என்செய்ய விதியினால் என்நீர்மை நல்கி அருளாத என்பிழை நீயலை நாடாத உடலாழி அளவியன்ற வளவேழ்

அஞ்சிறைய முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்